(14)

204890

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,
# பிரதேச சபைகள் சட்டம்

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

13.20 தபாற் செ

## பிரிவுகளின் அட்டவணை


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் .. .. | 1 |
| | **பாகம் I** | |
| | **பிரதேச சபையை அமைத்தல்** | |
| 2. | பிரதேச சபைகளை அமைத்தல் .. .. .. | 1 |
| 3. | பிரதேச சபைகளின் பணிகள் .. .. .. | 2 |
| 4. | பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் .. .. | 2 |
| 5. | உறுப்பினர்களின் பதவிக்காலம் .. .. .. | 2 |
| 6. | பிரதேச சபையின் பதவிக்காலத் தொடக்கமும் அத்தகைய பிரதேச சபையினை அமைக்கும் தேதியும் | 3 |
| 7. | பதவியை வறிதாக்கல் .. .. .. | 4 |
| 8. | தவிசாளரும் துணைத் தவிசாளரும் .. .. .. | 4 |
| 9. | செயலாளரை நியமித்தலும், அவரது தத்துவங்களும் கடமைகளும் .. | 4 |
| | **கூட்டங்கள்** | |
| 10. | பிரதேச சபைக் கூட்டங்களில் தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர் தலைமை வகித்தல் | 5 |
| 11. | கூட்டங்கள் .. .. .. .. | 5 |
| 12. | பிரதேச சபை குழுக்களை நியமித்தல் .. .. | 6 |
| 13. | கூட்ட நடப்பெண் .. .. .. .. | 6 |
| 14. | பிரதேச சபையின் தத்துவங்கள் பெரும்பான்மைக்கு உரித்தாக்கப் பட்டிருத்தல் . | 6 |
| 15. | கூட்டக் குறிப்புகள் .. .. .. | 7 |
| | **பாகம் II** | |
| | **பிரதேச சபைகளின் அந்தஸ்தும் தத்துவங்களும் கடமைகளும்** | |
| 16. | பிரதேச சபை ஒன்றிற்கு அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களையும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றையும் உரித்தாக்கல் | 7 |
| 17. | அத்தகைய காணியின் நிருவாகம் முதலியவற்றை உரித்தாக்கும் முறை | 8 |
| 18. | பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏனைய ஆதனம் | 9 |
| 19. | பிரதேச சபையின் தத்துவங்கள் | 10 |
| 20. | அளப்பனவுகளை அதிகாரமளிப்பதற்குள்ள தத்துவம் | 17 |




2—எ 094616—4,085 (86/12)

## பொதுவழிகள் பற்றிய தத்துவங்களும் கடமைகளும்

### பொதுவழிகள்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 21. | பொதுவழிகளுக்கும் தொடர்புகளுக்கும் பிரதேச சபையே பொது அதி அதிகாரசபையாக இருத்தல் | 18 |
| 22. | பொதுவழிகளும் திறந்த வழிகளும் தொடர்பாகப் பிரதேச சபைக்குள்ள பொதுவான தத்துவங்கள் | 19 |
| 23. | பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட பொதுவழிகள் | 19 |
| 24. | வீதிகளையும் பாதைகளையும் எல்லை குறித்து அவற்றின் நிரலொன்றைப் பிரதேச சபை வெளியிடுதல் | 20 |
| 25. | ஆட்சி வரையறை | 21 |
| 26. | அறிவித்தல்கள் எவ்வாறு சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது .. | 22 |
| 27. | புதிய பொதுவழிகளை நிருமாணிப்பதற்கும் எலவேயுள்ள பொது வழிகளை சீர்திருத்துவதற்கும் பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 22 |
| 28. | திசைதிருப்புதல்களுக்கு அல்லது பெருப்பித்தல்களுக்குத் தேவைப் படுகின்ற காணிகளைக் கொள்ளுதல் | 22 |
| 29. | பொதுவழியினைத் திசைதிருப்புதற்கு அல்லது பெருப்பிப்பதற்குத் தேவைப்படும் காணிகளின் கொடைகள். | 23 |
| 30. | பயன்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்ட தெருவைக் கையுதிர்ப்பதற் கான தத்துவம் | 24 |
| 31. | கட்டிட நோக்கங்களுக்காகப் புதிய தெருவை அடுத்துள்ள காணியை எடுப்பதற்கான தத்துவம். | 24 |
| 32. | ஒரு பிரதேச சபையின் ஏனைய தத்துவங்கள். | 24 |
| 33. | ஆதனச் சொந்தக்காரர்களின் நன்மைக்கான வீதிகள் | 25 |
| 34. | பகிரங்க வாகனத் தொடர்புகள் | 26 |
| 35. | பாழடைந்த அத்துடன் அபாயகரமான நிலையிலுள்ள வீடுகள் .. | 26 |
| 36. | அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுதல் .. .. | 26 |
| 37. | பழுதடைந்த வீடுகளின் பொருட்களை விற்பனை செய்தல் .. | 26 |


### பொது வழிகளைப் பேணுதலும் அவற்றைப் பழுதுபார்த்தலும்


| | | |
|---|---|---|
| 38. | பொதுவழிகளைப் பழுதுபார்த்தல் முதலியவற்றுக்காக காணிக்குள் பிரவேசிப்பதற்குத் தகுந்த அலுவலர்கள் அதிகாரமளிக்கப்படுதல் | 27 |
| 39. | பொருட்களை எடுப்பதற்கான தத்துவம் | 28 |
| 40. | கட்டடங்களை நிறுவுவதற்கானதும் கால்நடைகளை வைத்திருப்பதற்கான துமான தத்துவம் முதலியன | 29 |
| 41. | அருகாமையிலுள்ள காணிமீது குப்பை வீசுவதற்கான தத்துவம் .. | 30 |
| 42. | தற்காலிக வீதியை அமைப்பதற்கான தத்துவம் .. | 30 |
| 43. | மரங்களை வெட்டுவதற்கான தத்துவம் .. .. | 30 |
| 44. | வேலிகளைக் கட்டுவதற்கான தத்துவம் .. .. | 31 |
| 45. | நீர்வடிகால் முதலியவற்றை அமைத்து, திறந்துவைப்பதற்கும் வடிநீர்க் குழாய்கள் முதலியவற்றை கீழிடுவதற்குமான தத்துவம் | 31 |
| 46. | கற்கள் முதலியவற்றை இடுவதற்கான தத்துவம். | 31 |

பிரிவு — பொதுவழிகளினூடாகவுள்ள கட்டடங்கள் — பக்கம்

47. ஒரு பொதுவழியினூடாக முன்னைப்பட்ட கட்டடம் பற்றிய அறிவித்தல் .. 32
48. தற்காலிக வேலிகளையும் அடைப்புகளையும் நிறுவுதல் 32
49. வீதிகள் நெடுகிலும் கட்டடவரையறைகள். .. 33
50. கட்டட வரம்புகளை எல்லை வரையறுத்தல் 35
51. 49 ஆம் பிரிவின்கீழான எல்லா உரிமங்களுக்கும் இணைக்கப்பட வேண்டியதான நிபந்தனை 38
52. சட்டத்திற்கு முரணாக நிறுவப்படும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலைக் கையாள்வதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 39
53. கட்டடத்தால் அபிவிருத்தியடைந்த காணி தொடர்பில் நட்டஈட்டை மதிப்பீடு செய்வதற்கான நெறிகள். 40
54. கட்டிட எல்லைக்குட்பட்ட காணியின் சொந்தக்காரருக்கென அடுத்துள்ள காணியைக் கொள்ளுதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம் 41
55. உரித்துறுதிகளைக் காண்பிக்குமாறு கோருவதற்குள்ள தத்துவம் 41
56. உறுதியைக் காண்பிக்குமாறு கோருதல், அதனைப் பரிசீலிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும் 42
57. வளவுகளை நில அளவை செய்வதற்கான தத்துவம் .. 43
58. வெளிப்படையாக ஊடுருவல் செய்வதற்கான உரிமை உண்டென்பதை எண்பிக்கும் பொறுப்பு சொந்தக்காரர் மேலதாகும். 43
59. தடைகளை அல்லது சேர்த்தெல்லையிடல்களை அகற்றுதல் 44

பொதுவழிகள் முதலியவற்றிற்கான ஊறுகள்

60. மைல்கல், பாலம் முதலியவற்றை அழித்தல் .. 45
61. ஏதேனும் விலங்கின் மீது அல்லது வாகனத்தின் மீது ஏறிச் செல்லுதலை அல்லது அதனை ஓட்டிச்செல்லுதலைத் தடை செய்தல் 47
62. காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அவரது வீட்டிற்குச் செல்லும் வடிகால்கள்மீது பாலம் முதலியன அமைப்பதற்குக் கட்டுப் பட்டவராதல் 48
63. பொதுவழிக்கு ஊறுவிளைவிக்கின்றவாறான அத்தகைய விதத்தில் மரங்களை வளரவிடுதல் 48
64. அயலிலுள்ள காணியைத் துப்பரவு செய்தல், அதற்கு வடிகால் அமைத்தல் அல்லது அதனைத் திறத்தல் மூலம் பொதுவழியைச் சேதப்படுத்துதல் 48

பொது வழிகளில் தொல்லைகள் முதலியன

65. தவறுகள் .. .. .. .. 49
66. கட்டப்படாத கால்நடைகளைக் கைப்பற்றுதல் .. .. 52
67. கால்நடைகளைக் கைப்பற்றுவோருடன் தலையிடல் .. .. 53

பொது வழிகளின் சிறப்புப் பயன்பாடு

68. சிறப்பான நோக்கங்களுக்கென பகிரங்கப் பொதுவழிகளைப் பயன்படுத்துவதற்கு, அதிகாரமளிப்பதற்கு, பிரதேச சபைக்குள்ள தத்துவம் 53

பிரிவு பக்கம்

69. துணைவிதிகள் .. .. .. .. 54
70. அசாதாரணமான வாகனுதிகளினுல் விளைவிக்கப்படும் செலவுகள், அலு வலர்கள் முதலியோரின் தத்துவங்களும், கடமைகளும், பொறுப்பகளும் அலுவலர்கள் முதலியோரின் தத்துவங்களும் கடமைகளும் பொறுப் புகளும் 55
71. பகிரங்க வேலைகள் அவற்றிற்குப் பொறுப்பான எந்த அலுவலர்களினுல் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ, அந்த அலுவலர்களுக்கு உரித்தாக் கப்பட்ட தத்துவங்கள் 56
72. முறையான அலுவலர்களால் செய்யப்பட்ட அளப்பனவுகள் முடிவான சான்றுதல் 57
73. அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினுல் ஆதனத்திற்கு விளைவிக்கப்படும் ஊறுக்கு நட்டஈடு 57
74. நடுத்தீர்ப்பு .. .. .. 57
75. அலுவலர்களும் ஒப்பந்தகாரர்களும் இரவில் பொதுவழிகளில் கற்கள் முதலியவற்றை விட்டுவைத்தல் 58
76. குறித்த சில விடயங்களில் தவிர வீதி அலுவலர் அல்லது வீதி ஒப்பந்தக் காரர் குற்றப்பணத்திற்கு ஆளாதலாகாது 58
77. பொலிசு அலுவலர்களும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் இப்பாகத் தின் ஏற்பாடுகளை வலியுறுத்தல் வேண்டும் 58

பாகம் IV

பொதுச் சுகாதாரம் தொடர்பிலான தத்துவங்களும் கடமைகளும்

பொதுச் சுகாதாரம்

78. பிரதேச சபையானது பொதுவாக பகிரங்க சுகாதார அதிகார சபையாதல் வேண்டும் 58

வடிகாலமைப்பு

79. பிரதேச சபை பகிரங்க வடிகால்களை அமைத்தல் 59
80. வடிகால்களைச் செம்மையாக்கவும், மாற்றவும், இடைநிறுத்தவும் பிரதேச சபைக்குள்ள கடமை 59
81. மழைநீரும், வடிகால் கழிவும் வெளியேற்றப்படுவதற்கு முட்டுக் கட்டை யிடுதல் 60
82. வடிகால்களின் பொதுவான கட்டுப்பாடு .. .. 60
83. அதிகாரமளிக்கப்படாத வடிகால்களைப் பகிரங்க வடிகால்களுக்குள் செலுத்துவதற்கான தண்டம் 61
84. பிரதேச சபையின் சம்மதமின்றி வடிகால்கள் முதலியன மீது கட்டடங் கள் நிறுவப்படலாகாது 61

மலசலகூடங்கள்

85. மலசலகூட வசதி தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை .. 62
86. மேலதிக மலசலகூடங்களை நிர்மாணித்தல் .. .. 62
87. மலசலகூடங்களை ஏற்பாடு செய்வதற்குத் தொழிலாளர்களின் தொழில் தருநருக்குள்ள கடமை 62
88. தனிப்பட்ட மலசலகூடத்தை அடைப்பதில் அசட்டையாக இருத்தல் 63

89. மலசலகூடங்களின் பொதுவான கட்டுப்பாடு .. .. 64
90. பிரதேச சபையின் பணிப்புக்களுக்கு அல்லது துணைவிதிகளுக்கு முரணாக மலசலகூடங்கள் முதலியவற்றை அமைக்கின்ற அல்லது மாற்றியமைக்கின்ற ஆட்களுக்கான தண்டம் 65
91. மலசலகூடங்களை சோதனையிடுதல் முதலியன 65
92. மலசலகூடத்தை அகற்றும்படி அல்லது மலசலக் குழியை மூடிவிடும் படி பணிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 66

## மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும்

93. மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 66
94. சேகரிக்கப்பட்ட எல்லாக் குப்பையும் பிரதேச சபைக்குச் சொந்தமாக இருத்தல் வேண்டும். 67
95. குப்பையை அழித்தொழித்து விடுவதற்கும் சாதனத்தை வைத்திருப்பதற்குமான இடங்கள் 67

## சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள்

96. சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 67
97. உளதாயுள்ள கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 67
98. வீடுகள் மிதமிஞ்சி நெருக்கமாயிருத்தல் .. .. 68
99. வீடுகளைச் சோதனையிடவும் வெள்ளையடிக்கவும் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 68

## தொல்லைகள்

100. தொல்லைகளைச் சோதனையிடல் .. .. 69
101. தனிப்பட்ட வளவுகளிலுள்ள உடனலத்துக்கொவ்வாத கிடங்குகளைத் தூர்ப்பதற்கான தத்துவம் 69
102. விலங்கறு மனைகளுக்கு உரிமம் வழங்கல் .. .. 70
103. குழந்தையால் தொல்லை .. .. .. 70
104. பகிரங்க குளிக்கும் இடங்கள் .. .. .. 70
105. நீர்த்தேக்கம் அல்லது நீர் வசதி வேலைகளுக்குள் பாய்வதான அருவிகளின் தீழ்ப்பு 71
106. தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்படும் தீழ்ப்பு .. .. 71
107. ஆளினது அல்லது ஆதனத்தினது பாதுகாப்புக்கு ஊறுவிளைப்பதான மரங்கள் அல்லது மரக்கிளைகள், அடிமரங்கள் அல்லது பழங்கள் தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளருக்குள்ள தத்துவம் 72

## பொதுப் பயன்பாட்டுச் சேவைகள்

108. பொதுப்பயன்பாட்டுச் சேவைகளைத் தாபிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 73
109. பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்கான செலவுகளைக் கொடுத்துத் தீர்க்கும் முறை 73



3—எ 094616 (86/12)

110. நீர்ச் சேவைக்கான அல்லது மலசலமகற்றற் சேவைக்கான விசேட வீதவரியின உச்சஎல்லை 74

111. அரச ஆதனம் தொடர்பில் விசேட வீதவரிகளுக்கான பொறுப்பு 74

112. விசேட வீதவரிகளை மதிப்பிடுதலும் அறவிடுதலும் .. .. 74

113. தீர்மானத்தின் மூலம் விசேட வீதவரியிலிருந்து விலக்களிப்பு .. 7


### நீர் வழங்கல்


114. அருகாமையிலுள்ள வளவுகளுக்கான வழங்கல் .. .. 75

115. பிரதேச சபைகளின் பொதுவான தத்துவங்கள் .. 75

116. வீதவரி செலுத்துநர்கள் வீட்டுப் பாவனைக்காகப் பகிரங்க நீர் குழாயிலிருந்து இலவச நீர் வழங்குகைக்கு உரித்துடையோராதல் 75

117. வீட்டுத் தேவைகள் என்பதன் பொருள் .. .. 76

118. தனியார் சேவைக்கான ஒப்பந்தம் .. .. 76


### சந்தைகள்


119. கிராம முறைச் சந்தைகள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 76

120. ஒரு தனிப்பட்ட முறைச்சந்தைக்கு உரிமமொன்று தேவைப்படுமிடத்து ஏற்புடையனவான ஏற்பாடுகள் 76

121. தனிப்பட்ட முறைச்சந்தையை நடாத்தாது விட்டமைக்கான நட்டஈடு .. 77

122. துணை விதிகளை ஆக்குவதற்கான தத்துவம் .. .. 78

123. துணை விதிகளை அங்கீகரித்தலும் வெளியிடுதலும் .. .. 78

124. துணை விதிகளின் பிரதிகளை வழங்கல் .. .. 79

125. துணை விதிகள் அனுமதி மறுப்புக்கு அல்லது திருத்தத்திற்கு அமைவாதல் வேண்டும் என்பது 79

126. துணை விதிகளின் விடயப்பொருள் .. .. 79

127. சுடுகாடுகள் இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரதேச சபை தகுந்த அதிகாரியாகவிருத்தல் 91

128. காணிகளையும் கட்டிடங்களையும் கட்டாயமாகக் கொள்ளல் .. 91


## பாகம் V

### நிதி


129. பிரதேச சபை நிதியம் .. .. .. 92

130. பிரதேச சபையால் பெற்றுக்கொள்ளப்படும் பணங்கள் வங்கியில் வைப்பிலிடப்படல் வேண்டும் 93

131. பிரதேச சபை நிதியத்தின் பாகம் எதனையும் முதலீடு செய்வதற்குள்ள தத்துவம் 93

132. பிரதேச சபை நிதியத்தின் பயன்பாடு .. . 93

133. பிரதேச சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான கட்டளைகள், காசோலைகள் முதலியன 96


### வீதவரிகளும் வரிகளும்


134. வீதவரிகளும் ஏக்கர் வரியும் .. .. .. 96

பிரிவு பக்கம்


135. பிரதேச சபையால் விதிக்கப்பட்ட வீதவரியினின்று அல்லது ஏக்கர் வரியினின்று விலக்களித்தல் 98
136. அரச ஆதனத்தை வரி மதிப்பீடு செய்தல் .. .. 99
137. அரச ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்யப்படுவதற்கு உட்படுதலாகாது 99
138. வரிமதிப்பீட்டிற்கான ஆதனத்தைப் பிரித்தல் அல்லது ஒன்று திரட்டுதல் 99
139. விலைமதிப்பீட்டு நோக்கங்களுக்கான விபரத்திரட்டு .. .. 100
140. ஆதனங்களின் ஆண்டுப் பெறுமானத்தை வரிமதிப்பீடு செய்தல் .. 101
141. வரிமதிப்பீட்டு நிரலும் ஏக்கர் நிரலும் .. .. 101
142. வரிமதிப்பீடு முதலியவற்றிற்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கும் விடயத்தில் நடவடிக்கை முறை 103
143. ஆண்டுப் பெறுமதியைப் பாதிக்கும் ஆதனத்துக்குரிய மாற்றல்கள் செய்ததன் மேல் மதிப்பீட்டைப் பிரித்தல், முதலியன 104
144. குறித்த சில விடயங்களில் வரிமதிப்பீட்டைப் பிரித்தல் அல்லது வீத .. வரிகளைச் சரிபார்த்தல் 104
145. குடியிருப்பு இல்லாத விடயத்தில் வீதவரிகளைக் குறைத்தல் .. 104
146. முன்னைய மதிப்பீடுகளை அல்லது சரிபார்த்தல்களை ஏற்றுக்கொள்ளுதல் .. 105
147. வரிகளையும் உரிமத் தீர்வைகளையும் விதிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 106
148. வாகனங்கள், விலங்குகள் மீதான வரி .. .. 106
149. குறித்த சில உரிமத்தீர்வைகளை அறவிடுவதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம் 108
150. குறித்த சில வியாபாரங்கள்மீதான வரி .. .. 109
151. பல வியாபாரங்கள் கொண்டு நடாத்தப்படுமிடத்து தீர்வையை அல்லது வரியினைத் தீர்மானித்தல் 110
152. குறித்த சில தொழில்கள், உயர் தொழில்கள் என்பன மீதான வரி .. 110
153. அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மீதான வரி .. .. 114
154. குறித்த சில காணி விற்பனைகள் மீதான வரி .. .. 115
155. வீதவரிகள் முதலியன தொடர்பில் அசைவுள்ள ஆதனம், கைப்பற்றுதலிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல் 115
156. போமதியான வாடகையிலிருந்து செலுத்தப்படும் தொகைகளைக் கழித்தல் 116
157. பெயர் முதலியனவற்றில் உள்ள பிழை காரணமாக மதிப்பீடு முதலியன குறை காணப்படவோ பாதிக்கப்படவோ ஆகாது 116
158. வீதவரிகளையும் வரிகளையும் அறவிடுவதற்கான எழுத்தாணை .. 116
159. பிரதேச சபைக்கு வருமதியான வாடகையையும், கட்டணங்களையும் அறவிடுவதற்கான எழுத்தாணை 117
160. ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கான மட்டுப்பாடுகள் .. .. 118
161. செலவுத் தொகைகளின் அளவுத்திட்டம் .. .. 119
162. ஆதனத்தின் கைப்பற்றுகை .. .. .. 120

பிரிவு | பக்கம்

163. அசைவுள்ள ஆதனத்தின் விற்பனை .. .. 122
164. விற்பனையிலான மேன்மிகை .. .. .. 123
165. வீடுகளை உடைத்துத் திறப்பதற்குள்ள தத்துவம் .. 123
166. வீதவரி அல்லது வரிக் கொடுப்பனவிலான தவறுகை .. 123
167. நீதிவானின் மூடுதற் கட்டளை .. .. .. 124


## பாகம் VI

### பிரதேச சபைகளை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்

168. வரவுசெலவுத் திட்டம் .. .. .. 125
169. வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தவிசாளரின் தத்துவங்கள் .. 126
170. வரவு செலவுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட செலவினத்தை வேறுபடுத்தல் 126
171. நிதியத்தையும் ஆதனத்தையும் நிருவகிப்பது பற்றிய விதிகள் .. 127
172. கணக்கின் கணக்காய்வும் மேலதிகக் கட்டணமும் .. .. 127
173. வேலை நிறைவேற்றப்படுவதற்கான ஒப்பந்தங்கள், விதித்துரைக்கப்பட்ட எல்லைகளை விஞ்சினால், எழுத்தில் இடப்படுதல் வேண்டும் 132
174. 173 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கை முறை 133
175. செலவின விடயத்தின் சட்டப்படியாந்தன்மை பற்றிய ஐயுறவுகளைத் தீர்த்துவைத்தல் 134
176. ஓய்வூதியம், ஆண்டுத்தொகை, பணிக்கொடை அல்லது இளைப்பாறற்படி முதலியனவற்றின் தண்ணளிக்கொடுப்பனவு 134
177. பணிக்கொடைத் திட்டத்தைத் தாபிப்பதற்கான தத்துவம் .. 135


### கடன்கள்

178. வீதவரிகள், வரிகள் ஆகியவற்றின் பிணைப்பொறுப்பின் மேல்கடன் பெறுவதற்குப் பிரதேச சபைக்கு உள்ள தத்துவம் 135
179. கடன் பெறும் தத்துவங்களை வரையறுத்தல் .. .. 136
180. பிணைப்பொறுப்பின் படிவம் முதலியன .. .. 137
181. கடன்கள் திரட்டுவது தொடர்பாகப் பிரதேச சபைக்குள்ள தத்துவங்களைத் தவிசாளர் எப்போது பிரயோகிக்கலாம் என்பது 137
182. பிரதேச சபைக்கு வருமதியான பணத் தொகைகளை விட்டுவிடுதல் .. 137


## பாகம் VII

### பிரதேச சபை தொடர்பான குறைநிரப்பு ஏற்பாடுகள்

183. பிரதேச சபைக்கு எதிராக வழங்கப்படும் செலவுத் தொகைகளின் கொடுப்பனவு 137
184. கூட்டங்கள், வரி, நிதி என்பன பற்றிய விதிகள் .. .. 138
185. தவிசாளர் அகற்றப்படுதலும் பிரதேச சபை கலைக்கப்படுதலும் .. 139
186. துணைவிதிகளை மீறல் .. .. 142

பக்கம்
122
123
123
123
124
125
126
126
127
127
132
133
134
134
135
135
136
137
137
137
137
138
139
142


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 187. | பிரதேச சபையானது தவறுகை முதலியன புரியும் போது அமைச்சருக்குள்ள தத்துவம் | 142 |
| 188. | 181 ஆம் பிரிவின் கீழான அறிக்கை பெறப்பட்டதன்மேல் எடுக்கப்பட வேண்டிய வழி வகைகள் பற்றி அமைச்சர் தீர்மானித்தல் | 143 |
| 189. | கடன்களைத் திரட்டுவதற்கான பணிப்புரை வழங்குதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம் | 144 |
| 190. | செலவினங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான தத்துவம் .. | 144 |
| 191. | கடன்களை முற்பணமாக வழங்க உள்ளூர் ஆணையாளர்களுக்குள்ள தத்துவம் | 144 |
| 192. | பிரதேச சபையிடமிருந்து முதலையும், வட்டியையும் அறவிடுதல் .. | 144 |
| 193. | உள்ளூராட்சி ஆணையாளரின் தத்துவங்களை அல்லது கடமைகளை உதவி ஆணையாளருக்குக் கையளித்தல் | 145 |
| 194. | பிரதேச சபையொன்றின் ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணத்தைக் கேட்டுப் பரிசோதிப்பதற்கு, அமைச்சருக்குக்குள்ள தத்துவம் | 145 |
| 195. | கொள்கை பற்றி விதப்புரைகள் செய்வதற்கான தத்துவம் .. | 145 |
| 196. | அமைச்சரினதும் ஆணையாளரினதும் தத்துவம் .. .. | 145 |
| 197. | ஆணையாளருக்குள்ள மேலதிக தத்துவங்கள் .. .. | 146 |
| 198. | வீதிக்கு அல்லது பாதைக்குப் பெயரிடுதல் .. .. | 146 |


## பாகம் VIII

### பொது

### விதிப்பனவுகளையும் செலவுகளையும் அறவிடுதல்


| | | |
|---|---|---|
| 199. | வேலைகளை நிறைவேற்றுதலிலும் செலவுகளை அறவிடுவதிலும் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் செய்யப்பட்ட தவறுகைமீது, பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 147 |
| 200. | அவரது வாடகையிலிருந்து விதிப்பனவுகளைக் கழிக்கக்கூடிய இருப்பாட்சியாளர் மீது விதிப்பனவுகளை அறவிடுவதற்கான தத்துவம் | 147 |
| 201. | வருமதியாக வேண்டியவாடகையின் தொகையிலும் பார்க்கக்கூடிய தொகைக்கு இருப்பாட்சியாளர்கள் பொறுப்பாதல் ஆகாது என்பது | 148 |
| 202. | சொந்தக்காரர் தவறுகையில் இருப்பாட்சியாளர் வேலைகளை நிறைவேற்றுதலும் வாடகையிலிருந்து செலவுகளைக் கழித்தலும் | 148 |
| 203. | இருப்பாட்சியாளர்களினால் தடுக்கப்படுதல் .. .. | 149 |
| 204. | சொந்தக்காரரோ இருப்பாட்சியாளரோ செலவுகளைச் செலுத்தாவிடின் .. பரிகாரம் | 149 |
| 205. | சேதாரங்கள், செலவு தொகைகள் முதலானவைகளைத் தீர்மானித்தலும், அறவிடுதலும் | 149 |
| 206. | சேதாரங்களை அறவிடுதல் .. .. .. | 150 |
| 207. | தனியார் ஆதனத்தினை மேம்படுத்துவதனால் ஏற்பட்ட செலவுகளை அறவிடுதல் | 150 |


### நட்டஈட்டுக் கொடுப்பனவு


| | | |
|---|---|---|
| 208. | பிரதேச சபையானது பிரதேச சபை நிதியத்திலிருந்து நட்ட ஈட்டினை வழங்கலாம் | 150 |
| 209. | நட்டஈட்டினைத் தீர்மானித்தலும் கொடுப்பனவு செய்தலும் .. | 150 |

பிரிவு பக்கம்

187. பிரதேச சபையானது தவறுகை முதலியன புரியும் போது அமைச்சருக்குள்ள தத்துவம் 142

188. 181 ஆம் பிரிவின் கீழான அறிக்கை பெறப்பட்டதன்மேல் எடுக்கப்பட வேண்டிய வழி வகைகள் பற்றி அமைச்சர் தீர்மானித்தல் 143

189. கடன்களைத் திரட்டுவதற்கான பணிப்புரை வழங்குதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம் 144

190. செலவினங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான தத்துவம் .. 144

191. கடன்களை முற்பணமாக வழங்க உள்ளூர் ஆணையாளர்களுக்குள்ள தத்துவம் 144

192. பிரதேச சபையிடமிருந்து முதலையும், வட்டியையும் அறவிடுதல் .. 144

193. உள்ளூராட்சி ஆணையாளரின் தத்துவங்களை அல்லது கடமைகளை உதவி ஆணையாளருக்குக் கையளித்தல் 145

194. பிரதேச சபையொன்றின் ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணத்தைக் கேட்டுப் பரிசோதிப்பதற்கு, அமைச்சருக்குக்குள்ள தத்துவம் 145

195. கொள்கை பற்றி விதப்புரைகள் செய்வதற்கான தத்துவம் .. 145

196. அமைச்சரினதும் ஆணையாளரினதும் தத்துவம் .. .. 145

197. ஆணையாளருக்குள்ள மேலதிக தத்துவங்கள் .. .. 146

198. வீதிக்கு அல்லது பாதைக்குப் பெயரிடுதல் .. .. 146

## பாகம் VIII

### பொது

### விதிப்பனவுகளையும் செலவுகளையும் அறவிடுதல்

199. வேலைகளை நிறைவேற்றுதலிலும் செலவுகளை அறவிடுவதிலும் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் செய்யப்பட்ட தவறுகைமீது, பிரதேச சபைக்குள்ள தத்துவம் 147

200. அவரது வாடகையிலிருந்து விதிப்பனவுகளைக் கழிக்கக்கூடிய இருப்பாட்சியாளர் மீது விதிப்பனவுகளை அறவிடுவதற்கான தத்துவம் 147

201. வருமதியாக வேண்டியவாடகையின் தொகையிலும் பார்க்கக்கூடிய தொகைக்கு இருப்பாட்சியாளர்கள் பொறுப்பாதல் ஆகாது என்பது 148

202. சொந்தக்காரர் தவறுகையில் இருப்பாட்சியாளர் வேலைகளை நிறைவேற்றுதலும் வாடகையிலிருந்து செலவுகளைக் கழித்தலும் 148

203. இருப்பாட்சியாளர்களினால் தடுக்கப்படுதல் .. .. 149

204. சொந்தக்காரரோ இருப்பாட்சியாளரோ செலவுகளைச் செலுத்தாவிடின் .. பரிகாரம் 149

205. சேதஈடுகள், செலவு தொகைகள் முதலானவைகளைத் தீர்மானித்தலும், அறவிடுதலும் 149

206. சேதஈடுகளை அறவிடுதல் .. .. .. 150

207. தனியார் ஆதனத்தினை மேம்படுத்துவதனால் ஏற்பட்ட செலவுகளை அறவிடுதல் 150

### நட்டஈட்டுக் கொடுப்பனவு

208. பிரதேச சபையானது பிரதேச சபை நிதியத்திலிருந்து நட்ட ஈட்டினை வழங்கலாம் 150

209. நட்டஈட்டினைத் தீர்மானித்தலும் கொடுப்பனவு செய்தலும் .. 150

### நடவடிக்கைமுறையும் சட்டநடவடிக்கைகளும்


210. அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல் .. .. .. 151
211. அறிவித்தல்கள் செயலாளரினால் அல்லது அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினால் கொடுக்கப்படலாம் அல்லது பெறப்படலாம் 151
212. நீதிவானால் விளங்கப்பட வேண்டிய தவறு .. .. 151
213. குற்றவழக்குத் தொடுத்தற்கான வரையறை .. .. 152
214. ஒரு மாத அறிவித்தல்வரை அல்லது வழக்குக் காரணத்திற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் பிரதேச சபைக்கெதிராக வழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது என்பது 152
215. பிரதேச சபையும் அதன் அலுவலர்களையும் பாதுகாத்தல் 153


### அலுவலர்களின் தத்துவங்களும், பொறுப்புக்களும்


216. பொது அதிகாரங்களை அதன் அலுவலர்களுக்கு வழங்குவதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 154
217. பிரதேச சபையின் அலுவல்களைத் தடைசெய்தற்கான தண்டனை 154
218. பிரதேச சபை அலுவலர்களினால் தத்துவமானது துர்ப்பிரயோகம் செய்யப்படுதற்கான தண்டம் 154
219. பிரதேச சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் ஒப்பந்தங்களில் அக்கறை காட்டக் கூடாதென்பது 154
220. பிரதேச சபையின் அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாதல் வேண்டுமென்பது 155


### நீக்கம், இடைக்கால ஒழுங்குகள், பல்லினமானவை


221. எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் ஒரு பட்டினசபை, கிராமசபை அல்லது உள்ளூரதிகாரசபை பற்றிய குறிப்பீட்டின்பயன் .. 155
222. நீக்கம் .. .. .. 156
223. ஏற்பாடு செய்யப்படாத விடயங்களைச் சீராக்குதல் .. .. 156
224. இடைக்கால ஏற்பாடு .. .. .. 156
225. நீக்கமும் நிலைமாறுகால ஏற்பாடும் .. .. 156
226. பொருள்கோடல் .. .. 157

முதலாம் அட்டவணை 159
இரண்டாம் அட்டவணை 159
மூன்றாம் அட்டவணை 160
நான்காம் அட்டவணை 161
ஐந்தாம் அட்டவணை 162
ஆறாம் அட்டவணை 162

# 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

*(1987 ஏப்பிறல் 16 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

1486
ச.வ—.ஓ.——
1804

**உள்ளூர் மட்டத்தில் நிருவாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்குப் பெருமளவு வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் நோக்குடன் பிரதேச சபைகளைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்தகைய சபைகளின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் குறித்துரைப்பதற்கும்; அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்வினவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டமானது, 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அதன் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடுகள் தொடர்பாக கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### பிரதேச சபையை அமைத்தல்

பிரதேச சபைகளை அமைத்தல்.

**2.** (1) மக்கள், உள்ளூராட்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பயனுறும் வகையில் பங்குபற்றுவதனை இயலச்செய்யும் கருத்துடன், அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் இடப்பரப்பினைப் பிரதேச சபை இடப்பரப்பு ஒன்றாக வெளிப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பின் நிருவாக எல்லைகளை வரையறுத்தலும் வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தப்படும் பிரதேச சபை ஒவ்வொன்றினதும் நிருவாக எல்லைகளானவை, இயலுமானவரையில், உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எல்லைகளுக்குள் அடங்குபவையான மாநகரசபைப் பிரதேசத்தில் அல்லது நகரசபைகள்கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட ஒரு பட்டினத்தில் அடங்கியிருப்பதான எவையேனும் இடப்பரப்புகள் நீங்கலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றன் எல்லைகளுக்கு நேரொத்தனவாக இருத்தல் வேண்டும். அமைச்சரானவர், அதே கட்டளை மூலம் அல்லது பின்னரான கட்டளை ஒன்றன் மூலம், அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்குப் பிரதேச சபை ஒன்றினை அமைக்கலாம் என்பதுடன் அத்தகைய சபைக்குப் பெயர் ஒன்றினையும் குறித்தொதுக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப்பட்டதான பிரதேச சபை ஒவ்வொன்றும், இடையறுவழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆதனத்தைக்கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் தத்துவம் கொண்டதாதலும் வேண்டும், அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

(3) பிரதேச சபையின் பொது இலச்சினையானது, அத்தகைய சபையினது செயலாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அவர்களது பெயரை ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் ஒப்பமிட வேண்டியவர்களான, அத்தகைய சபையின் தவிசாளர், அத்துடன் செயலாளர் என்போர், முன்னிலையிலேயேயல்லாது, பிரதேச சபையின் சார்பாக எத்தகையதுமான அத்தகைய ஒப்பந்தம் அல்லது வேறு சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப் பட்டதான பிரதேச சபை ஒன்றன் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கிறது என்ற காரணத்தினுல் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் தெரிவில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினுல் மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பிரதேச சபைகளின் பணிகள்.

3. ஒவ்வொரு பிரதேச சபை இடப்பரப்புக்குமென அமைக்கப்பட்ட பிரதேச சபையானது அத்தகைய இடப்பரப்புக்குள்ளான உள்ளூர் அதிகாரசபையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், பகிரங்கப் பொது வழிகள் என்பன தொடர்பான கருமங்கள் எல்லாவற்றினதும் ஒழுங்கு படுத்துகையும், கட்டுப்பாடும், நிருவாகமும் அத்துடன் மக்களின் சௌகர்யத்தையும், வசதியையும், சேமநலனையும் அத்தகைய இடப் பரப்பினுள் இருக்கும் வாழ்வசதிகள் எல்லாவற்றையும் பொதுவாகப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் அப்பிரதேச சபைக்குப் பொறுப்பிக் கப்பட்டதாக இருத்தலும் வேண்டும்.

பிரதேச சபைகளின் உறுப்பினர்கள்.

4. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப்பட்ட ஒரு பிரதேச சபையானது, தவிசாளர் ஒருவரையும், துணைத் தவிசாளரையும், அத்தகைய பிரதேச சபை யானது எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பின் விஸ்தீரணம், மக்கள் தொகை, அத்துடன் பொருளாதார அபிவிருத்தி மட்டம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு, அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையின ரான, தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

5. (1) பொதுத் தேர்தல் ஒன்றில் தெரிவுசெய்யப்படும் பிரதேச சபை ஒன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரதும் பதவிக்காலம்—

(அ) முதலாவது பொதுத் தேர்தலின் விடயத்தில், 6 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) முதலாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வரும் பொதுத் தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒரு வரின் விடயத்தில், நேர்முன்னரான பிரதேச சபை உறுப் பினர்களது பதவிக்காலம் முடிவடைந்ததிலிருந்து கணிக் கப்படுதல் வேண்டும்,

அத்துடன் இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அத்தகைய உறுப்பினர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினுலொழிய, அப்பதவிக்காலம் நாற்பத்தெட்டு மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதியாதல் வேண்டும்.

(2) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்—

(அ) பதவிக்காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாக, அத்தகைய பதவிக்காலமானது அவ்வாண்டின் அல்லது அவ்வாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின் எந்த மாதத்தில் முடிவுறுகின்றதோ, அந்த மாதத்திற்கு முந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை நியமிப்பதன் மூலம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிக்காலத்தைச் சுருக்கலாம் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழ் அல்லது இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பதவிக்காலமானது முடிவுறும் தேதிக்குப் பதிலாகப் பதவிக்காலமானது அவ்வாண்டில் அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆண்டினை அடுத்துவரும் ஆண்டில் எந்தநாளன்று முடிவுறுகின்றதோ, அந்த நாளுக்குப் பிந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை, நியமிப்பதன் மூலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம். அத்துடன், அதன் பின்னர், கடைசிக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாகப் பிந்திய தேதியொன்றை நியமிப்பதன் மூலம் காலத்துக்குக் காலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம் :

ஆயின், எவ்வாருயினும், அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி அல்லது காலத்துக்குக் காலம் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதிகளின் கூட்டுமொத்தம் பன்னிரண்டு மாதங்களை விஞ்சுதல் ஆகாது.

(3) இறக்கின்றவரான, பதவி துறக்கின்றவரான அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்றவரான பிரதேச சபை ஒன்றின் உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அவருக்கு முன் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

6. இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட இருப்பதான பிரதேச சபை ஒவ்வொன்றினதும் பதவிக் காலமானது, அமைச்சரானவர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக் கூடியதான அத்தகைய தேதியில் தொடங்குதல் வேண்டும். அத்தகைய தேதியானது, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய பிரதேச சபை அமைக்கப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிரதேச சபையானது அத்தேதியில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

பிரதேச சபையின் பதவிக்காலத் தொடக்கமும் அத்தகைய பிரதேச சபையினை அமைக்கும் தேதியும்.

பதவியை வறிதாக்கல்.

7. முன்னரே கோரிப் பெற்றுக்கொள்ளப்பட்டதான பிரதேச சபையின் அனுமதியின்றி, மூன்று மாத காலப்பகுதியொன்றுக்கு பிரதேச சபையின் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறுகின்றவரான பிரதேச சபை ஒன்றன் உறுப்பினர் எவரும் அந்நிகழ்வு காரணமாகவே பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

தவிசாளரும், துணைத் தவிசாளரும்.

8. (1) பிரதேச சபை ஒன்றன் தவிசாளர், பிரதேச சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் என்பதுடன் இச் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் பிரதேச சபையினால் செய்யப்படவேண்டியவையென அல்லது நிறைவேற்றப்படவேண்டியவையெனப் பணிக்கப்பட்ட அல்லது தத்துவமளிக்கப்பட்ட எல்லா நிறைவேற்றுச் செயல்களும், பொறுப்புகளும், சந்தர்ப்பத்திலிருந்து முரணாக கருத்துத் தோன்றினாலன்றி, தவிசாளரால் செய்யப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

(2) தவிசாளர், எழுத்திலான கட்டளை மூலம், இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்துவங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எவற்றையேனும் பிரதேச சபையின் துணைத்தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது வேறு எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(3) பிரதேச சபையின் துணைத் தவிசாளரால், அல்லது செயலாளரால் அல்லது எவரேனும் வேறு அலுவலரால், தவிசாளரின் கட்டளை மூலம் அவருக்குக் கையளிக்கப்பட்டதான ஏதேனும் தத்துவத்தை, கடமையினை அல்லது பணியினைப் பிரயோகித்தலானது, நிறைவேற்றுதலானது அல்லது புரிதலானது, அக் கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைந்ததாகவும் அத்தகைய நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய கையளிப்பானது எந்நேரத்திலாயினும் தவிசாளரின் கட்டளை மூலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது நீக்கஞ் செய்யப்படலாம்.

(4) சுகவீனம் காரணமாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்துக்காக தவிசாளர் வருகை தராத காலப்பகுதியின்போது, துணைத் தவிசாளர், தவிசாளரைப்போன்று அதே தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் அதே கடமைகளைப் புரியலாம்.

செயலாளரை நியமித்தலும், அவரது தத்துவங்களும் கடமைகளும்.

9. (1) பிரதேச சபையின் செயலாளராக இருப்பதற்கென அல்லது செயற்படுவதற்கென தகுதிவாய்ந்தவரும் பொருத்தமானவருமான ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதேச சபை ஒன்றன் செயலாளர், பிரதேச சபையின் பிரதான நிருவாக அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதான எவையேனும் விதிகளினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ளதான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவருக்கு வழங்கப்பட்டவையான அல்லது அவர்மீது சுமத்தப்பட்டவையான அத்தகைய தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும், அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) தவிசாளரும் துணைத்தவிசாளரும் பதவி வகிக்காதொழியும் காரணத்தினால் பிரதேச சபை ஒன்று அதன் பணிகளை நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, செயலாளர், அந்தப் பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் ஏற்பட்ட காலத்திற்கும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அந்த வெற்றிடங்களை நிரப்பும் காலத்திற்கும் இடைப்பட்டதான ஏதேனும் காலப் பகுதியின்போது, இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் பிரதேச சபைக்கு, தவிசாளருக்கு அல்லது துணைத் தவிசாளருக்கு உரித்தாக்கப்பட்டவையான, அல்லது வழங்கப் பட்டவையான அல்லது சமத்தப்பட்டவையான எல்லா உரிமைகளையும், சிறப்புரிமைகளையும், தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தல், பிரயோகித்தல், புரிதல், அத்துடன் நிறைவேற்று தல் வேண்டும்.

## கூட்டங்கள்

10. தவிசாளர் அல்லது அவர் வருகை தராதபோது துணைத் தவிசாளர், பிரதேச சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் தவிசாளர், துணைத்தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதபோது, சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கெனத் தெரிவு செய்தல் வேண்டும். பிரதேச சபைக் கூட்டங்களில் தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர் தலைமை வகித்தல்.

11. (1) பிரதேச சபை ஒன்றன் சாதாரண கூட்டங்கள் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் மூலம் ஆக்கப் பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் துணைவிதிகளினால் அல்லது விதிகளினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிகளில் அல்லது அத்தகைய கால இடைவெளிகளில் அலுவல்களைக் கையாளுவதற்காக நடாத்தப்படுதல் வேண்டும். கூட்டங்கள்.

(2) பிரதேச சபையின் சிறப்புக் கூட்டமொன்று கூட்டுவது விரும்பத்தக்கதெனத் தவிசாளர் கருதும் போதிலெல்லாம், அவரால் கூட்டப்படலாம்; அத்துடன் பிரதேச சபையின் சாதாரண கூட்டங்களுக்கு விதித்துரைக்கப்பட்ட கூட்ட நடப்பெண்ணைக அமையும் உறுப்பினர்களின் தொகைக்குக் குறையாத உறுப்பினர்களினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான தேவைப்படுத்தலொன்று சமர்ப்பிக்கப்படும் போதிலெல்லாம் தவிசாளரால் கூட்டப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணக்கமாகக் கூட்டப்படும் சிறப்புக் கூட்டம், தவிசாளரினால் தேவைப்படுத்துகை பெறப்பட்ட ஏழு நாட்களுக்குள்ளாகக் கூட்டப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் பிரதேச சபையின் தவிசாளர், அவருக்குச் சமர்ப் பிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்படுத்துகையைப் பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாகச் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்ட மறுத்தால் அல்லது வேண்டுமென்று அசட்டை செய்தால், அதன்பின்னர் எந் நேரத்திலும் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுவது உதவி ஆணையாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டுமென்பதுடன் அக் கூட்டத்தில் அவர் தலைமை தாங்குதலும் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரைத் தலைமை தாங்கப் பிரதியீடுசெய்வதும் அவருக்குச் சட்டபூர்வமான தாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான சிறப்புக் கூட்டம் பற்றியதும் அக்கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல் பற்றியதுமான அறிவித்தல், அக் கூட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இரு நாட்களுக்குக் குறையாமல், பிரதேச சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுதல் அல்லது அவரது வதிவிடத்தில் விட்டுவைக்கப்படுதல் வேண்டும்.

பிரதேச சபை குழுக்களை நியமித்தல்.

12. (1) பிரதேச சபை ஒன்று காலத்திற்குக் காலம், ஒன்றில் சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ள அல்லது பகுதியளவில் சபை உறுப்பினர்களையும் பகுதியளவில் பிரதேச சபை இடப்பரப்பின் வேறு குடியிருப்பாளர்களையும் அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாகத் தாபிக்கப்பட்ட கிராமோதய சபைகளின் தவிசாளர்களையும் கொண்டுள்ள குழுக்களை, சபையின் தத்துவங்களுள், கடமைகளுள் அத்துடன் பணிகளுள் எது தொடர்பாகவேனும் அல்லது சபையின் பரிசீலனையின் கீழுள்ள கருமம் எது தொடர்பாகவேனும் சபைக்கு ஆலோசனை கூறும் நோக்கத்திற்கென நியமிக்கலாம், அத்துடன், காலத்திற்குக் காலம், அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, ஏதேனும் கடனைத் திரட்டுவதற்கு ஏதேனும் வீதவரியை விதிப்பதற்கு அல்லது ஏதேனும் வரியினைச் சுமத்துவதற்கு உள்ள தத்துவம் தவிர்ந்த அதன் தத்துவங்களுள் எதனையும், அத்துடன் கடமைகளுள் எதனையும் கையளிக்கலாம்.

(2) பின்வரும் விடயங்களுள் ஒவ்வொன்று தொடர்பிலும் பிரதேச சபைக்கு ஆலோசனையளிப்பதற்கென (1) ஆம் உட்பிரிவின் கீழ் தனியான குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் ;

(ஆ) வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி ;

(இ) தொழினுட்பச் சேவைகள் ; அத்துடன்

(ஈ) சுற்றுடலும் வாழ்வசதிகளும்;

மேற்போந்தவற்றுக்கு அமைவாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் எத்தொகையினவான குழுக்களும் நியமிக்கப்படலாம்.

கூட்ட நடப்பெண்.

13. பிரதேச சபையின் கூட்டம் எதற்குமென கூட்ட நடப்பெண் அக் கூட்டத் தேதியில் பதவி வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்றுதல் வேண்டும். அத்தகைய எண்ணிக்கையின் மூன்றிலொன்று முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, அந்த முழுவெண்ணுக்கும் பின்னத்திற்கும் நேரே கூடியதான முழுவெண், இப்பிரிவின் நோக்கங்களுக்காக மூன்றிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிரதேச சபையின் தத்துவங்கள் பெரும்பான்மைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.

14. (1) பிரதேச சபையொன்றினால் முடிவுசெய்யப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களும் அல்லது விடயங்களும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடாத்தப்படும் பிரதேச சபையின் கூட்டம் எதிலும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குகள் எவ்விடயத்தின் மீதேனும் சரிசமமாகப் பிரிந்திருந்தால், தவிசாளர், துணைத் தவிசாளர், அல்லது கூட்டத்திறகுத் தலைமை தாங்கும் வேறு உறுப்பினர், உறுப்பினர் என்ற வகையில் கொண்டுள்ள வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

கூட்டக் குறிப்புகள்.

15. பிரதேச சபை ஒன்றன் எல்லா நடவடிக்கைகளும், முடிபுகளும், கட்டளைகளும் அத்துடன் செயல்களும் கூட்ட அறிக்கைப் புத்தகம் ஒன்றில் பதியப்படுதல் வேண்டும் என்பதுடன் பிரதேச சபையின் அடுத்துவரும் கூட்டத்தில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களுடன் அவற்றை உறுதிப்படுத்தியதன் மேல், தவிசாளரால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டதான தவிசாளரால் சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பதிவின் பிரதியொன்று, இலங்கையிலுள்ள நீதிமன்றம் அல்லது நியாயசபை எதிலும் சான்றாக அனுமதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

## பாகம் II

### பிரதேச சபைகளின் அந்தஸ்தும் தத்துவங்களும் கடமைகளும்

பிரதேச சபை ஒன்றிற்கு அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றையும் உரித்தாக்கல்.

16. (1) அபிவிருத்திச் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்பட்டனவும் பிரதேச இடப்பரப்பில் அமைந்திருக்கின்றனவும் பிரதேச சபையில் பயன்படுத்தப்படுவனவுமான எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் அமைச்சரால் அல்லது அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட பிரதேச சபைக்கு, அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமானது (1) ஆம் உட்பிரிவு ஏற்புடைத்தாவதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமா என்பது பற்றிய பிணக்கு எதுவும், அமைச்சரினது அமைச்சுச் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்மீது அவரது முடிபானது இறுதியானதாதலும் வேண்டும்.

(3) பிரதேச சபை இடப்பரப்பொன்று தொடர்பாக அதன் உள்ளூராட்சித் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அபிவிருத்திச் சபையொன்றினால் கொள்ளப்பட்ட அல்லது உறப்பட்ட எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும், 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்டதான பிரதேச சபைக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.